'DINAMALAR'

PAGE NO:02

DATE: 26.12.2021

# கடல்சார் துறையில் ஆய்வுப் பணி பல்கலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுச்சேரி பல்கலைக்கழகம், கடல்சார் துறையில் ஆராய்ச்சி பணிகளில் ஒத்துழைப்பதற்காக, பெங்களூரில் உள்ள தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் நடந்தது.

**புதுச்சேரி, டிச. 26–**

புதுச்சேரி பல்கலைக்கழகம், கடல்சார் துறையில் ஆராய்ச்சி பணிகளில் ஒத்துழைப்பதற்காக, பெங்களூரில் உள்ள தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில், பேராசிரியர் ஷைலேஷ் நாயக், பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவன இயக்குநர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் கையெழுத்திட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.

நிகழ்ச்சியில், நிதி அதிகாரி லாசர், சர்வதேச உறவுகள் துறை டீன் சுப்ரமணியம் ராஜு, குளோபல் பாலிடிக்ஸ் புல முதல்வர் பாலசந்திரன் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து., உலக அரசியலின் நிலை குறித்த பயிலரங்கில், பேராசிரியர் ஷைலேஷ் நாயக் "கடல்சார் ஆய்வுகள், இந்தியாவிற்கான ஒரு ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல்" என்ற தலைப்பில் பேசினார்.

"DINAKARAN"

DATE: 26.12.2021

PAGE NO: 04

கடல்சார் ஆராய்ச்சி பணிகளில் ஒத்துழைக்க

# பெங்களூரு நிறுவனத்துடன் புதுவை பல்கலை ஒப்பந்தம்



புதுவை பல்கலைக்கழகம் கடல்சார் துறையில் ஆராய்ச்சி பணிகளில் ஒத்துழைப்பதற்காக பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் பல்கலை துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

புதுச்சேரி, டிச. 26: புதுவை பல்கலைக்கழகம் கடல் சார் துறையில் ஆராய்ச்சி பணிகளில் ஒத்துழைப்பதற்காக பெங்களூரில் உள்ள தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. புதுவை பல்கலை துணை வேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில் பேராசிரியர் ஷைலேஷ் நாயக், பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பதிவாளர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் நிதி அதிகாரி லாசர், சர்வதேச உறவுகளின் டீன் சுப்ரமணியம் ராஜு, குளோபல் பாலிடிக்ஸ் புல முதல்வர் சுபாசந்திரன் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் அடையாளமாக, 2021ல் உலக அரசியலின் நிலை குறித்த பயிலரங்கம் நடத்தப்பட்டது. மேலும், தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவன என்ஐஏஎஸ் இயக்குநர் ஷைலேஷ் நாயக்கின் "கடல்சார் ஆய்வுகள்: இந்தியாவிற்கான ஒரு ஆராய்ச்சி நிகழ்ச்சிநிரல்" என்ற தலைப்பில் ஒரு சிறப்பு விரிவுரை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பாரம்பரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களான சீனா-தைவான் பிரச்னை மற்றும் அமெரிக்க ஈடுபாடு, மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஈடுபாடு மற்றும் ரஷ்யா-பால்டிக் நாடுகளுக்கு இடையேயான ஆற்றல் அரசியல், பாரம்பரியமற்ற பாதுகாப்பு என எண்ணற்ற தலைப்புகள் விவாதிக்கப்பட்டன. தெற்காசியாவில் இடம்பெயர்வு மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் ஆப்பிரிக்கா சுற்றுச்சூழல் பேரழிவுகள், தற்போதைய கோவிட்-19 நோய்த்தொற்றுகளால் பாதிப்பிற்குள்ளான பொதுசுகாதாரம், தென்கிழக்கு ஆசியாவில் ஒருங்கிணைந்த அமைப்பாக ஆசியான் பங்கு போன்ற சவால்களை பற்றியும் விவாதிக்கப்பட்டது.